## குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, பெரம்பலூர்

முன்னிலை: திரு. இரா. இராஜசேகரன், L.L.M.,
நீதித்துறை நடுவர் எண்.1 (மு.கூ.பொ.),
பெரம்பலூர்.

2026–ம் ஆண்டு மார்ச் மாதம் 11–ம் நாள் புதன்கிழமை

**Crl.M.P. No. 285/2026**
**(** CNR.No.TNPB02-000708-2026)
**in**
**Cr.No.109/2026**

சதீஸ்குமார் (33/2026),
த/பெ. தங்கவேல் .....மனுதாரர்/வாகன உரிமையாளர்

/எதிர்/

தமிழ்நாடு அரசுக்காக
காவல் உதவி ஆய்வாளர்,
பெரம்பலூர் நகர காவல் நிலையம்,
குற்ற எண்.109/2026 .....எதிர்மனுதாரர்/குற்ற முறையீட்டாளர்

இம்மனு 11.03.2026ம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.செந்தில்குமார், அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர் தரப்பில் அரசு குற்றத்துறை வழக்கறிஞர் நிலை–1 அவர்கள் முன்னிலையாகியும் இரு தரப்பு வாதங்களை கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

### உத்தரவு

1. மனுதாரர் தரப்பில் வழக்குச் சொத்தான TN 46 AB 6529 என்ற பதிவெண் கொண்ட White கலர் அசோக் லைலாண்ட் டிப்பர் லாரி வாகனத்தின் உரிமையாளர் ஆவேன் என்றும், மேற்படி வாகனத்திற்கான ஆவணங்கள் எனது பெயரிலேயே உள்ளது என்றும், கடந்த 19.02.2026ம் தேதி அரசு அனுமதியின்றி திருட்டு தனமாக மேற்படி வாகனத்தை வைத்து சுமார் 6 யூனிட் அளவிற்கு சோழிங்கற்கள் எடுத்து அரசிற்கு இழப்பு எற்படுத்தியதாக பெரம்பலூர் நகர காவல் நிலைய குற்ற எண்.109/2026–ல் U/s.303(2) BNS r/w 21(1) MM&DR Act ல் வழக்கு பதிவு செய்து மேற்சொன்ன வாகனத்தை பறிமுதல் செய்தார்கள். ஆனால் பறிமுதல் செய்யப்பட்ட வாகனத்தை இன்று வரை பெரம்பலூர் போலிசார் மாண்பமை நீதிமன்றத்தில் R.P செய்திடவில்லை. உண்மையில் நான் அப்பாவி. இந்த வழக்கிற்கும் எனக்கும் எந்தவித தொடர்புமில்லை.

2. பெரம்பலூர் நகர காவல் நிலையத்தார் தவறுதலாக இந்த வழக்கை எனக்கெதிராக புனைந்துள்ளனர். மேற்சொன்ன வாகனம் எனது அன்றாட பணிக்கு மிகவும் அத்தியாவசியமாக தேவைப்படுகிறது. மேற்சொன்ன வாகனத்தை தொடர்ந்து நீதிமன்றம் பாதுகாப்பில் இருந்து வந்தால் வாகனங்களின் உதிரி பாகங்கள் மழை வெயிலில் பாதிக்கப்பட்டு துருப்பிடித்து வாகனங்கள் மீண்டும் இயங்க முடியாத சூழ்நிலை ஏற்படும். எனவே மேற்சொன்ன வாகனங்களை மாண்பமை நீதமன்றத்தில் ஒப்படைத்து ஆர்.பி செய்திடவும், ஆர்.பி செய்த வாகனத்தை எனது இடைக்கால பொறுப்பில் வழங்கும் தருவாயில் நான் மேற்சொன்ன வாகனத்தை இதன் வடிவம் மாறாமல் மீண்டும் நீதிமன்றம் ஆணையிடும் போது தற்போதைய நிலையிலேயே ஒப்படைப்பேன் என உறுதி கூறுகிறேன் என மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. அரசு தரப்பிற்கு அறிவிப்பு அனுப்பி பதில் பெறப்பட்டது. அதில் இவ்வழக்கு சொத்தான டிப்பர் லாரியை மனுதாரரிடம் ஒப்படைத்தால் மீண்டும் இதே போன்ற குற்ற செயல்களுக்கு வழக்கு சொத்தை ஈடுபடுத்துவார் என்பதால் வழக்கு சொத்தை மனுதாரருக்கு ஒப்படைக்க ஆட்சேபனை தெரிவிப்பதாக பதில் கூறப்பட்டுள்ளது.

4. வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. மேற்படி வழக்குச் சொத்தானது நான்கு சக்கர வாகனமாகும். மேற்படி வாகனமானது 19.02.2026 ம் தேதி பெரம்பலூர் நகர காவல் நிலைய போலிசாரால் கைப்பற்றப்பட்டுள்ளது. மேற்படி வழக்கு சொத்தானது தற்போது வரை இந்நீதிமன்றத்தில் ஒப்படைக்கப் படவில்லை. மேலும் காவல் துறை சார்பில் தெரிவிக்கப்பட்ட பதிலில் மேற்படி வாகனத்தை மனுதாரரிடம் ஒப்படைத்தால் மீண்டும் குற்ற செயலில் ஈடுபடுவார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

5. மேலும் மனுதாரர் தரப்பில் மேற்படி வாகனத்தை காவல் நிலையத்தில் நிறுத்தி வைத்திருக்கும் போது அதன் இயந்திர பாகங்கள் வெயிலினாலும், மழையினாலும், பழுதடைய வாய்ப்புள்ளது என்று கூறப்பட்டுள்ளது. மேலும் இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட வாகனம் மனுதாரருடையது அல்ல என்று அரசு தரப்பில் மறுக்கப்படவில்லை. மேலும் மேற்படி வாகனத்தின் ஆவணங்கள் அனைத்தும் மனுதாரர் பெயரில் இருப்பதாக மனுதாரர் தரப்பில் கூறப்பட்டுள்ளது. வழக்கு முடியும் வரை வழக்குச் சொத்தை காவல் நிலையத்தில் வைத்திருப்பது மனுதாரருக்கு மிகுந்த இழப்பை ஏற்படுத்தும் என்பதாலும், மேலும் வழக்கின் தன்மை மற்றும் சூழ்நிலையை கருத்தில் கொண்டும் அதை மனுதாரரிடம்

ஒப்படைத்தால் வழக்கு விசாரணைக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாது என்பதால் வழக்கு சொத்தை மனுதாரரிடம் நிபந்தனைகளின் அடிப்படையில் ஒப்படைக்கலாம் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. மேலும் அரசு தரப்பில் மேற்படி வாகனத்தை இன்னும் ஆர்.பி செய்யாமலிருப்பதால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்ட தினத்திலிருந்து இரண்டு வாரங்களுக்குள் மேற்படி வாகனத்தை வழக்கு சொத்து எண் வழங்க ஒப்படைக்கவேண்டும் என்றும், மேற்படி வாகனம் வழக்கு சொத்து எண் வழங்கப்பட்ட பிறகு மனுதாரர் வசம் வாகனத்தை இடைக்காலமாக ஒப்படைக்க வேண்டும் என்றும் உத்தரவிடப்படுகிறது.

<u>நிபந்தனைகள்</u>

1. மனுதாரருக்கு சொந்தமான TN 46 AB 6529 என்ற பதிவெண் கொண்ட White கலர் அசோக் லைலாண்ட் டிப்பர் லாரியின் மதிப்பிற்கேற்ப மனுதாரர் மற்றும் இரு நபர்கள் தலா ரூபாய் 2,00,000/-க்கு பிணையப்பத்திரங்களை இந்நீதிமன்றம் திருப்தியுறும் வகையில் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும்.
2. மேற்கண்ட TN 46 AB 6529 என்ற White கலர் அசோக் லைலாண்ட் டிப்பர் லாரியை நான்கு கோனங்களில் புகைப்படம் எடுத்து அந்த புகைப்படத்துடன் அதற்குண்டான குறுந்தகட்டினை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும்.
3. மேற்படி வழக்குச் சொத்தை விற்கவோ, உருமாற்றம்செய்யவோ கூடாது.
4. நீதிமன்றம் கோரும் போது வழக்குச் சொத்தினை நேரில் ஆஜர்படுத்த வேண்டும்.
5. மனுதாரர் ரூ.10,000/-ஐ பெரம்பலூர் மாவட்ட இலவச சட்ட உதவி மையத்திற்கு செலுத்த வேண்டும்.
6. வாகனத்தின் அசல் RC புத்தகத்தை மேற்படி வாகனத்தின் கடனுக்காக பெற்றுள்ள நிதிநிறுவனத்தின் அத்தாட்சி கடிதத்தை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும்.

இறுதியாக, இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

2026-ம் ஆண்டு மார்ச் மாதம் 11-ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

*(ஒம்/-).இரா.இராஜசேகரன்*

குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1(மு.கூ.பொ.),

பெரம்பலூர்.